[திரு. ஏ.கே. போஸ்] [2014 ஜூலை 25

திட்டங்களை நிறைவேற்றிடும் மக்கள் போற்றும் மகா சக்தியே! (மேசையைத் தட்டும் ஒலி) தீய சக்திகளையும், நன்றி கெட்டவர்களையும், நயவஞ்சகர்களையும் அடியோடு வீழ்த்திய வீரத் திருமகளே! (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் வாழும் மனித தெய்வமே! மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013-2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை அரசு உறுதிமொழிக் குழுவின் 103 முதல் 114 வரையிலான 12 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன், நன்றி.

நண்பகல் 12-00

(இ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா திரு. ஆர். மனோகரன், மனுக்கள் குழுத் தலைவர்.

***திரு. ஆர். மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக நாடுகளும், உலக வங்கியும் உவந்து பாராட்டிய, உலகம் போற்றும் உன்னதத் தலைவியே! சாதனைகளின் குவியலே! (மேசையைத் தட்டும் ஒலி) கருணையின் பிறப்பிடமே! முல்லைப் பெரியாறு பிரச்சினைக்கு முடிவு கட்டிய எங்கள் முதன்மை முதல்வரே! (மேசையைத் தட்டும் ஒலி) ‘அமைதி, வளம், வளர்ச்சி’ என்னும் 3 இலக்கினை முன்னிறுத்தி, முன்னேற்றப் பாதையில் தமிழகத்தை வழிநடத்திச் செல்லும் எங்கள் தன்னிகரில்லாத் தலைவியே! (மேசையைத் தட்டும் ஒலி) அன்பை அறமாக்கி, ஆற்றலை செயலாக்கி, அரசாட்சிக்கே இலக்கணம் படைக்கும் எங்கள் புரட்சித் தலைவி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களைப் பணிந்து, இருகரம் கூப்பி வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013-2014 ஆம் ஆண்டிற்கான பேரவை மனுக்கள் குழுவின் நாற்பது மற்றும் நாற்பத்தொன்றாவது அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன். நன்றி, வணக்கம்.